செய்தி வெளியீடு எண். 332 நாள்: 03.09.2021

**திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சி, கோலடி அரசு உயர்நிலைப்பள்ளியில் இன்று (03.09.2021) நடைபெற்ற மாபெரும் கோவிட்-19 தடுப்பூசி சிறப்பு முகாமை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் துவக்கி வைத்து, மாவட்டம் முழுவதும் 380 முகாம்கள் மூலமாக 50,000-ம் நபர்களுக்கு தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவித்துள்ளார்**

திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சி, கோலடி அரசு உயர்நிலைப்பள்ளியில் இன்று (03.09.2021) நடைபெற்ற மாபெரும் கோவிட்-19 தடுப்பூசி சிறப்பு முகாமை மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., ஆகியோர் துவக்கி வைத்து, பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கொரோனா நோய்த்தொற்றை முற்றிலுமாக ஒழிக்க இன்று மாபெரும் தடுப்பூசி முகாமினை தமிழகம் முழுவதும் துவக்கி, அதனடிப்படையில் மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய பகுதிகளில் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், முன்கள பணியாளர்கள் வாயிலாக, அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. அதனைத் தொடர்ந்து, இன்று திருவள்ளூர் மாவட்டத்தில் மாபெரும் சிறப்பு தடுப்பூசி முகாம் நடத்தப்படுகிறது. மாவட்டம் முழுவதும் 12 பொறுப்பு அலுவலர்களைக் கொண்ட 380-க்கும் மேற்பட்ட இடங்களில் சிறப்பு முகாம்களை அமைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள். அதில் சுமார் 1091 முன்கள பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு, இன்று 50,000-ம் நபர்களுக்கு தடுப்பூசிகள் செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 42.50 சதவீத மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. முதல்கட்ட முகாமில் 8,24,808 நபர்களுக்கும், இரண்டாம் கட்ட முகாமில் 2,35,382 நபர்களுக்கும் என மொத்தம் 10,60,190 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீறிய முயற்சியால் தமிழ்நாடு முழுவதும் 3.37 கோடி நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 23,000-ம் நபர்களுக்கு மட்டும் தடுப்பூசி செலுத்தப்பட்டு வந்தது. ஆனால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நோய்த் தொற்றை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மாபெரும் கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமினை ஏற்பாடு செய்து, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற ஒட்டு மொத்த மக்களும் தடுப்பூசி செலுத்துவதற்காக இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 380 முகாம்களில் 50,000-ம் நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வரும் இம்மாபெரும் தடுப்பூசி சிறப்பு முகாமினை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ள வேண்டும் என மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இம்முகாமில் பூவிருந்தவல்லி சுகாதார மாவட்ட துணை இயக்குநர்(சுகாதார பணிகள்) மரு.செந்தில்குமார், திருவேற்காடு நகராட்சி ஆணையர் திருமதி.மு.ரா.வசந்தி, நகராட்சி பொறியாளர் திருமதி.நளினி, சுகாதார அலுவலர் திரு.ஆல்பர்ட், வட்டார மருத்துவ அலுவலர் மரு.லாவண்யா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**